**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.4063/ஆ5/2025, நாள்.08/09/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – அரசுப் பள்ளிகளில் பயின்று சாதனை புரிந்த மாணவர்களை அவர்கள் பயின்ற பள்ளியின் தூதுவர்களாக (School Ambassadors) விண்ணப்பித்தல் – கால அவகாசம் நீட்டித்தல் – சார்பு

பார்வை

1. 2025–2026ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை எண். 43 – மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண். 11
2. அரசாணை நிலை எண். 112 பள்ளிக் கல்வித் (பக5(1)) துறை நாள். 15.05.2025
3. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.025232/எம்1/இ1/2025, நாள். 08.08.2025 மற்றும் 02.09.2025
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 25.08.2025

•••••

பார்வை 3ல் காணும் 08.08.2025 நாளிட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, அரசுப் பள்ளியின் மீது மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும் பொது மக்களுக்கு நம்பிக்கையை வலுப்படுத்திடவும், அரசுப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு முன்னெடுப்புகளில் முன்னாள் மாணவர்களின் பங்கேற்பை உறுதி செய்யும் பிரநிதியாகவும், முன்னாள் மாணவர்களை அரசுப் பள்ளித் தூதுவர்களாக, (School Ambassadors) நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி இணையதள பக்கத்தில் ஆகஸ்ட் 30ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க பார்வை 4ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

பார்வை 3ல் காணும் 02.09.2025 நாளிட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், தெரிவு செய்யப்பட்ட 8209 பள்ளிகளில் 3999 பள்ளிகளில் 9664 முன்னாள் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர் எனவும், தெரிவு செய்யப்பட்ட 8209 பள்ளிகளிலும் முன்னாள் மாணவர்கள் பள்ளித் தூதுவர்களாக (School Ambassadors) செப்டம்பர் 23ஆம் தேதி வரை விண்ணப்பிக்க கால நீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளி தூதுவரை நியமிக்க தெரிவு செய்யப்பட்ட பள்ளிகளில் குறைந்தபட்சம் ஒரு பள்ளிக்கு 5 முன்னாள் மாணவர்கள் விண்ணப்பித்திருப்பதை உறுதி செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட பள்ளிகளில் விண்ணப்பித்த முன்னாள் மாணவர்களை பள்ளித் தூதுவராக தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, "நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி" என்ற இணையதளம் வாயிலாக முன்னாள் மாணவர்கள் பள்ளித் தூதுவர்களாக செப்டம்பர் 23ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மற்றும் சார்ந்த அரசு நடுநிலை / தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் உதவி திட்ட அலுவலர் குழுவாக இணைந்து இப்பணிகளை கண்காணித்திடவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. பள்ளிகளின் பெயர் பட்டியல்
2. https://nammaschool.tnschools.gov.in/#/alumni-nomination

08/9/25

08-09-25 முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
அரசு உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,
சார்ந்த அரசு நடுநிலை / தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம் (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. உதவித் திட்ட அலுவலர்
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
   வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)